விற்காமல் தடை செய்யவும் அப்படி விற்றால் விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், அந்தப் பரிசுச் சீட்டுகளை பறிமுதல் செய்யவும் இப்போது ஆணை யிடப்பட்டிருக்கிறது. காவல் துறையினர் முறைப்படி நடவடிக்கை எடுப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம். அந்தச் சுற்றறிக்கையும் எல்லோருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மக்கள் தொகை குறை வாக உள்ள கர்நாடக மாநிலத்தில் பரிசுச் சீட்டுக்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 கோடியும், மேற்கு வங்கத்தில் சற்று அதிகமாக மக்கள் தொகை உள்ள அந்த மாநிலத்தில் பரிசுச் சீட்டு விற்பனை மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 3 கோடியும், மராட்டிய மாநிலத்தில் ஒரு லட்சம் பரிசுகள் தினமும் குலுக்கப் படுகிறது. மேற்கு வங்காளத்தில் வாராவாரம் பரிசுச் சீட்டு குலுக்கல் நடத்தப் படுகிறது. நமது மாநிலத்தில் பரிசு சீட்டுக்கள் மூலம் அதிக வருமானம் வருவதற்கு மாநில அரசு வாராவாரம் பரிசுச் சீட்டுக் குலுக்கல் நடத்த முன் வரும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆண் டுக்கு 4 முறை சிறப்புப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் நடத்தி வருகிறோம். இப்போது வருகிற திங்களிலிருந்து 2 வாரத்திற்கு ஒரு முறை என்கிற முறை மேற்கொள்ளப்பட இருக்கிறது. அதனால் உறுதியான பலன் ஏற்படுமானால், அதன்மூலமாக வெளி மாநிலங்களிலிருந்து வந்து விற்கப்படுகின்ற பரிசுச் சீட்டு அளவுக்கு மேல் தமிழகத்திற்கு பயன்படத்தக்க அளவிற்கு தமிழக பரிசுச் சீட்டு விற்பனையாகும் என்ற நிலை ஏற்படுமானால் அதற்குப் பிறகு தமிழக அரசு பரிசீலிக்கும், இப்போது இரண்டு வாரத்திற்கு ஒரு முறை, ஒரு தன்மை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவுக் கடன்கள் வசூல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன், கே. ஆர். சுந்தரம், என். பழனிவேல் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. டி. மணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கன்னியா குமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் நிலவள வங்கி மூலமாகவும் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் விவசாயிகள் வாங்கியுள்ள கடன்களைப்

1981 ஏப்ரல் 29] [திரு. டி. மணி]

போதுமான அவகாசம் தராமல் உடனடியாகத் திருப்பிச் செலுத்த எடுத்துள்ள நடவடிக்கை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, விவசாய வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றிவரும் கூட்டுறவுக் கடனமைப்புகளின் அடிப் படையே பாதிக்குமளவு கடந்த ஐந்து ஆண்டுகளாக அவற்றின் தவணை தவறிய நிலுவை நிலவரம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1974-75-ம் ஆண்டு விவசாயச் சங்கங் களின் மட்டத்தில் 18.8 சதவிகிதமாக இருந்த நிலுவை அளவு 1980-81 ஆம் ஆண்டு 78 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. நிலவள வங்கிகளின் அளவில் இது 6.4 சதவிகிதத்திலிருந்து 87.00 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

இத்தகைய ஒரு அசாதாரணமான சூழ்நிலையில் கூட்டுறவுக் கடனமைப்பு நிறுவனங்களின் எதிர்காலமே மிகவும் பாதிக்கப்படும் அபாயம் நிலவியதால் நிலுவை வசூலை சட்டபூர்வமாக நடவடிக்கைகளின் மூலம் துரிதப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன்படி வசதி படைத்த விவசாயிகளிட மிருந்து நிலுவையை வசூலிக்க போதிய சந்தர்ப்பம் அளித்துவிட்டு சட்டப் பூர்வமாக நடவடிக்கை எடுக்கலாம் என்று அறிவுறுத்தப்பட்டது. இதன் விளைவாக பாக்கி வசூலில் நிலவிய பெரும் தேக்க நிலையில் ஒரு வரவேற்கத் தக்க முன்னேற்றம் காணப்படுகிறது.

கல்குளம் தாலுகாவைப் பொறுத்தவரையில் 47 கூட்டுறவுச் சங்கங்களும், இரண்டு நிலவள வங்கிகளும் உள்ளன. இவற்றில் 10 விவசாயச் சங்கங்கள் மற்றும் ஒரு நிலவள வங்கி இயங்கும் பகுதிகளில் வசூலில் நிலவும் பெரும் தேக்க நிலை காரணமாக, ஓரளவு வசதி படைத்த மற்றும் பத்து ஏக்கருக்கு மேற்பட்ட நிலச் சுவான்தார்களிடமிருந்து மட்டும், போதிய அளவு தவணை கொடுத்தபின் சட்டபூர்வ வசூல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிறு விவசாயிகளும் சிரமப்படுத்தப்படுகின்றனர் என்ற கூற்று ஆதாரமற்றது.

திரு. டி. மணி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுக்காவில் பலதரப்பட்ட விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களும் நிலவள வங்கிகளும் இருக்கின்றன. அந்த நிறுவனங்களிலிருந்து சிறு விவசாயிகள் கடன் வாங்கி சாகுபடி செய்திருக்கிறார்கள். கடந்த சாகுபடி யின்போது வறட்சியின் காரணமாக நெல் சாகுபடி முற்றிலும் தீய்ந்துவிட்டது. அது மட்டுமல்ல. பல விவசாயிகள் பணம் பெற்று மாவள்ளிக்கிழங்கு (மரச் சீனி) பயிர் செய்திருக்கிறார்கள். அதன் விலை வீழ்ந்திருக்கிறது. அதனால் ஒரு ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கிற விவசாயிகள் இந்தக் காலகட்டத்தில் தாங்கள் பெற்றுக்கொண்ட கடனை திருப்பிக் கட்ட

முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, இந்த கடனை கட்ட முடியாத சிறு விவசாயிகளை கஷ்டத்திலிருந்து விடுவிக்க அரசு முன்வருமா? அவர்களுடைய கடனைத் தள்ளி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்பது அந்த நிலத்திலே அவர்கள் செய்யும் பயிரைப் பொறுத்து நிர்ணயிப்பதல்ல. ஐந்து ஏக்கருக்கு கீழே உள்ள விவசாயிகள் சிறு விவசாயிகள் ; அதற்கு மேல் பெரிய விவசாயிகள் என்று இருந்தாலும் 5 ஏக்கர் வரை வைத்திருக்கிற சிறு விவசாயிகள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஐந்து ஏக்கருக்கு மேல் 10 ஏக்கருக்குக் கீழே இருக்கிற நடுத்தர விவசாயிகள் மீதுகூட தற்போது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. பத்து ஏக்கருக்கு மேல் நிலம் இருந்து, உப தொழில்கள் மூலம் வருமானம் பெறுகின்ற வர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. மற்றபடி சிறு விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

* திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, அமைச்ச ரவர்கள் அங்கே இருக்கிற சில நிலைமைகளைத் தெளிவுபடுத்தினார்கள். ஆனால் அங்கே நடைபெறுவதெல்லாம் இந்த வறட்சியால் பாதிக்கப்பட் டிருக்கிற பல கிராமங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே அந்த மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறதா? இல்லையா என்ற தகவலை அரசுக்கு கொடுத்திருக்கிறார்களா என்பது எங்களுக்குத் தெரியாது. வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக மரவள்ளிக்கிழங்கு விலை மிகவும் குறைந்திருக்கிறது. அதனால் அந்த சிறு விவசாயிகளுடைய கடனை அரசு தள்ளி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, வறட்சி யால் பாதிக்கப்பட்ட பகுதியாக இருந்தால் கண்டிப்பாக அங்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது. இதுகுறித்து போடப்பட்டுள்ள உத்தரவு ஒன்று அந்த மாவட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்படும்.

7. வரவு-செலவுத் திட்டம், 1981-82—வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 25—சின்கோனா.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

“ மானியக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,08,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.”